உ

தாய்மொழி தழைக! தாயகம் வாழ்க!!

தமிழணங்கு.

ஒரு மதிமுகத் தாள்.

"அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே."

மலர் க.] விக்ரம வைகாசி. [இதழ் உ.

வாழ்த்து.

கமழ்மணங் கிளரும்வாகைக் காவலன் செங்கோல் வேல்க!
இமிழ்மா செழிலி பெய்க! யாவரும் யாவும் உய்க!
அமிழ்துறழ் மகளிர் கற்பா ரணிதமி ழணங்கு வாழ்க!
தமிழ்வலந் திகழ்ந்தூ ழூழி தமிழரண் தழைக! நன்றே!

தமிழணங்கு வணக்கம்.

ஆய் நூற் புலவோர் கலைக்கடலில்
ஆழ்ந்தங் குணரும் கருத்துருவாய்
அவிர்மா மணியென் மனோன்மணியே!
அடியே னுயிருக் காருயிரே!
நோய்செய் வினையைத் தெறுமருந்தே!
நுண்மாண் புலனு மறிவறியேன்
நுகருஞ் சுவைத்தே மொழியமிழ்தே!
நுவல்நான் மறைமெய்ப் பொருளே! என்
தாய்தந் தையரில் னுயர்மகவோர்
தமர்நட் புறவும் யாவையுநீ
தமியேன் நின் தாள் அன்றியினிச்
சாரேன் பிறதெய் வதமென்றும்
சாய்வில் திறலோர் உளத்தளியிற்
றளரா தொளியிற் கிளர்விளக்கே!
தகைசால் மகிழ்விற் றமிழரகந்
தழையத் திகழுந் தமிழணங்கே!

ஆ. மா. சிவஞானம்.

உயர்ந்தோர் உறுதி உரை.

உண்மையான முறையில் அடையும் வெற்றியே சிறந்த வெற்றியாம். வெற்றியை விரும்பி உண்மையைக் கைவிடலாகாது.

ஒவ்வொருவர் வாழ்க்கையும் அவரவர் நினைவையே அடிப்படையாக வுடையது.

நாம் எதைச் செய்யினும் முழுமனதோடு செய்தல் வேண்டும்.

சீரிய ஆர்வம் நேர்மையின் செவிலி.

விருப்பமே எண்ணத்தின் பிறப்பகம்.

உன்னையே நீயுன்னிப்பார். ஒவ்வொன்றிலும் உவகையுற்று முற்றிலும் பற்றற்றிரு.

கல்வி மக்களின் இயற்கைத் திறனை ஈர்த்து வெளிப்படுத்துங் கருவியாம்.

சமயச் சடங்குகள் அவ்வவர்க்குள்ள இயற்கையான தெய்வப் பற்றை வெளிப்படுத்தும் சமயங்களாம்.

ஊக்கமே ஆக்கந்தரும்.

எழுந்திரு விழித்திரு வெற்றி கிட்டுமட்டும் உழைத்திரு.

நல்லவை செய்யுங்கால் மனத் தூண்டுதல்களுக்கு ஆட்படாமல் மல்லிட்டு வெல்லுதல் வேண்டும்.

ஒவ்வொருவருளத்திலும் உலக ஊழியத்தை ஊக்குதல் நலம்.

இயற்கைச் சக்தி அவ்வக்கால மாறுபாட்டால் மக்களை அடக்கி ஆளுகிறது.

நா நாணயம் இருந்தால் பண நாணயம் தானே நாடிவரும்.

அருமையும் ஆதரவும்.

உலகில் எப்பொருளாயினும் அதன் பெருமை விளங்கினால்தான் மக்களுக்கு அதனிடத்துள்ள அருமைதோன்றும். அவ்வருமையைப் பற்றியே அதன்பால் அனைவரும் ஆர்வங்கொள்ளுவர். அங்ஙனம் ஆர்வம் விளையின் அதற்கு ஆதரவு தானே வளரும். தற்போது நம் தமிழ்மொழிக்குப் பொதுமக்களின் ஆதரவு மிகவும் குறைவாக இருக்கின்றது. ஏனெனின் அவர்களுக்குத் தம் தாய்மொழியின் பெருமை விளங்காமையால், அதன் அருமை தோன்றவில்லை. ஆதலால்தான் அம்மக்களுக்குத் தமிழின்மேல் ஆர்வமும் ஆதரவும் தோன்றாமல் இருக்கின்றன. தாய்மொழியின் பெருமையை விளக்கும் வாயில்கள் நம் நாட்டில் தற்போது பெரிதும் குறைவே என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

அன்றியும், நம்மவர்க்குள் பெரும்பாலோர் பிறமொழி கலவாத தனித்தமிழ் உரைகளைப் பிழையறப் படிக்கவும், பேசவும், எழுதவும் வழியறியாது விழிக்கின்றனர். கல்வி கேள்விகளில் வல்லோர் சிலர்க்கன்றி ஏனையோர்க்கு நம்மொழியைப்பற்றியும், நாட்டைப்பற்றியும் சிறிதும் கவலை இல்லை. தமிழ்நாட்டின் முன்னேற்றங்கருதிப் பலபடப் பேசுபவர்களுக்கும் சொல் அளவில் நிற்க இயல்கின்றதே அன்றித் தாம் சொல்லியவற்றைச் செய்கையில் நடத்தத் துணிகரம் வருவது அரிதாக இருக்கின்றது. இவற்றிற்குக் காரணம் நம்மவர் அனைவர்க்கும் நம் தாய்மொழியின் பெருமை விளங்காமையே யாம்.

நம்மருமைத் தமிழ்மொழி மிகவும் பழமைவாய்ந்தது. இப்பொன்மொழியைப் படி முழுதாண்ட முடியுடைவேந்தர் மூவரும் தம்மாருயிர்போல் போற்றி வளர்த்துவந்தனர். பிற்காலத்திய சிற்றரசர்களும், அவ்வரசரோடொத்த பெருஞ் செல்வரும் நம் செந்தமிழ்ச் செல்வத்திற்குத் தக்க அரண் செய்துவந்தனர். பழந்தமிழ் நூற்களில் அவ்வவ் வேந்தர்களையும் வேளிர்களையும் பற்றிப் படிக்கப் படிக்க வியப்பே விளையும். பத்துப் பாட்டு எட்டுத்தொகை முதலிய சங்க நூற்களும், சிந்தாமணி சிலப்பதிகாரம் முதலிய பெருங்காப்பியங்களும், பிறவும் கற்போருள்ளங் கொள்ளைகொள்வனவாம். பண்டைத் தமிழ் நூற்களின் வாயிலாக நம் முன்னோரது

அருமையை அறிந்துவக்கலாம். அன்னுர் விழுமிய ஒழுக்கம் நம் உணர்ச்சியை உயிர்ப்பிக்கும். அவர்களது பழக்க வழக்கங்கள் நம் வாழ்க்கைக்கு உறுதுணையாம். அக்காலத்திய கைத்தொழில், வாணிபம், அரசியல் முதலியன யாரும் போற்றற்குரியன. தெவிட்டாத அறிவின்பம் நிரம்பிச் செம்மனச் செல்வராய் வாழ விரும்பும் யார்க்கும் செந்தமிழ் நூற்கள் ஓதி உணர்தற்குரியன. தற்காலத்திலுள்ள நம் தமிழ்ப் பொதுமக்கள் அப்பழந்தமிழ் நூற்களின் அருமையை அறிவது அருமையே ஆயிற்று. ஆதலின் அவர்கள் அவற்றை ஆதரித்து நலம் பெறுவது எங்ஙனம்!

உலகில் உள்ள மேன்மையான மொழிகளுள் தமிழும் ஒன்றாகத் தலைசிறந்து விளங்குந் தன்மையுடையது. உலகம் முழுவதும் ஒப்பப் போற்றும் உயரிய நூல்களை வழங்கியதும் நம் தமிழே. நந்தமிழ் நாடே மற்றெந்நாட்டினர்க்கும் வழிகாட்டியாக முன் நின்றது. ஆனல் இன்று எந்நிலையிலும் பிறநாடுகளுக்குப் பின் நின்றதும் அதுவே. இவ்வுண்மைகளை நம்மிற் பெரும்பாலோர் கண்கூடாக உணர்வது கடினமாக இருக்கின்றது.

எந்நாட்டில் தாய்மொழிக்குச் சிறந்த ஆதரவு இருக்கின்றதோ அந்நாடு எல்லா வகைகளிலும் மேன்மை உடையதாகவே இருக்கும். மேல்நாட்டினர் தற்போது உயர்ந்த நிலையில் இருப்பதற்கு அவர்களது தாய்மொழிப்பற்றும் ஒரு முதற்காரணமாகும். நம்மவர்க்குள் பலர் பலவகைகளில் அயல்நாட்டினரைப் பின்பற்றுகின்றனர். ஆயின், அவர்களைப்போலவே இவர்களும் தாய்மொழிப்பற்றும் நாட்டுணர்ச்சியும் உடையவர்களாக இருக்கின்றனரா எனின் விடை முற்றுந் தடைபடுகிறது. அயல்நாட்டாரது நடை, நொடி பாவனைகளைப் பின்பற்ற முன்வரும் நம்மவர்கள் தாய்மொழியுணர்ச்சியிலும் அவர்களைப்போல் ஆர்வங்கொள்ளின் மிகவும் நன்மை விளையும்.

தமிழணங்கு நந்தமிழின் பெருமையைப் பொதுமக்கள் அனைவர்க்கும் விளக்கி நம்மவர்க்குள் தாய்மொழியில் ஆர்வம் ஊட்டுதலையே தன் தலையாய திருப்பணியாகக் கொண்டுள்ளாள். ஆதலின் தமிழுலகத்துள்ளார் யாவரும் இவ்வூழியத்தின் அருமை நோக்கி அம்மதிமுகத் தாளை அன்புடன் ஆதரிப்பார்களாக.

ஆசிரியன்.

அண்மைப் புலவர் அருந்தனிக் கவிகள்.

திரு பண்டித வி. சாமிநாத பிள்ளை அவர்கள்
கருந்திட்டைக்குடி, தஞ்சை.

15-ம் பக்கத் தொடர்ச்சி.

மேலும், ஐயரவர்கள் மேற்கூறிய இராசாளியார்ப் பெருந்தகையார் டில்லிமாநகரில் நடந்த ஐந்தாம் ஜார்ஜரசர் பெருமானார் முடிசூட்டு விழாவுக்குச் சென்று வடநாட்டுத் தலயாத்திரை செய்து வந்தபின் நடந்தபெருங் கொண்டாட்டத்தில் கூறிய சிறப்புக்கவிகள் வருமாறு:—

(க)

சீர்கொண்ட வடநாட்டிற் சோணாடு
சிறந்ததெனச் செய்ய வாங்கோர்
பேர்கொண்டு திகழரித்து வாரத்திற்
பிறங்கியப்பேர் பெற்று மேலும்
ஏர்கொண்டு மாறாத மங்கலத்தால்
விளங்கியச்சொ லியைப் பெற்ற
ஊர்கொண்டு செய்தவத்தா லவ்வொளிரு
மொருபெரியோன் உரைசால் வள்ளல்;

(உ)

கற்றவர்கற் பகமணையான் கருணையொரு
வடிவானோன் கருதிநோற்கும்
நற்றவர்நட் பினனறிஞர் சூழ்ந்திருப்ப
நடுவிருக்கு நலத்தான் மிக்கோன்
மற்றெவரும் புகழ்கொடையான் றமிழ்க்கலைதே
ரறிஞனிதி மல்கு கிற்போன்
கொற்றவர்க ணனியுவக்கும் கோபால
சாமியெனுங் குரிசி லாவான்.

(௩)

தன்னுள்ளக் கமலமதைத் திருமகளுக்
குதவவவள் தணவா வன்பன்
மின்னுள்ளு முகிலனையா னுடனிருப்ப
வுளக்கண்ணால் விரும்பிப் பார்ப்போன்
என்னுள்ளத் திருப்பதன்றிப் புறக்கண்ணாற்
காணுவதற் கியைய வந்தான்
மன்னுள்ளு முயரைந்தாஞ் சார்சரச
னெனக்கொண்டு மகிழ்ச்சி மல்கி.

(௪)

ஆங்கிலநா டகன்றிவட்போந் தவிர்டில்லி
நகர்புகுதந் தனையான் மோலி
தாங்குமொரு பெருஞ்சிறப்பைத் தான்கண்டு
மகிழ்கிற்பான் சால வெண்ணி
யோங்கியவந் நகர்புகுந்தக் காட்சியொருங்
கேற்றதற்பின் புவந்து போந்து
பாங்குபெறச் சோணாட்டும் பிறநாட்டு
மோங்குபுகழ் பரப்பி னனே.

ஐயரவர்கள் இராசாளியார் பொருட்டு "அரிவைக் கோவை" என்னும் பிரபந்தம் இயற்றினார்கள். அது வெளிவருமுன் இரு பேரறிஞர்களும் உலகு துறந்தார்கள்.

இனி ஒரு அமையத்து ஒருவர் இப்புலவர் பெருந்தகைக்கு ஒரு தொடுதோல் அனுப்புவதாகச் சொல்லிப் போந்தவர் என்ன காரணத்தாலோ அனுப்பத் தாமதித்திருந்தார். அக்காலத்து நம் புலவரவர்கள் பத்தாவது வகுப்பு மாணவர் பாட புத்தகத்துக்கு வருடந்தோறும் உரை எழுதி வெளியிடும் வேலையுடையராக விருந் தார்கள். அதன்பொருட்டு அச்சிடுதற்குத் தஞ்சை நகருக்குவந்து தங்கி இருந்தார்கள். அதுபோது அடியேன் இளைஞன்; அவர்கட்கு அத்துறையில் ஏற்ற உதவிகளைச் செய்துவந்தேன். மேலும், அவர் கள் உடல்நலக்குறைவுடனிருந்தார்கள். வெளியில் சிறிது புறத்தே சென்று சிரமத்துடன் வருதலைப் பார்த்து "ஒரு செருப்பு அணிந்து

கொள்ளலாகாதா? ஐயா!" என்றேன். உடனே, அவர்கள் ஓர் காலணு அஞ்சலட்டையை (தபாற் கார்டு-விலை அப்போது காலணு) என்பாற்றந்து ஆசுகவியாக,

முன்னே வளைவுவைத்து மோதிரமுஞ் செய்தமைத்துப்
பின்னே குதியுயரம் பேணவைத்துச்—சொன்னபடி
நாலட்டை போட்டிரண்டு நாளி லனுப்புகபூப்
போனுற்ற நல்லசெருப் பு.

என்னும் வெண்பாவைச் சொல்லி எழுதுவித்தார்கள். மறு மூன்றுநாளே செருப்பு வந்தது. அணிந்து காட்டி மகிழ்வித்து மகிழ்ந்தார்கள். இவர்கள் கும்பகோணத்தில் பள்ளிக்கூடத்தில் தம்முடன் ஆசிரியராயிருந்த ஒருவரிடம் அடிக்கடி மூக்குத்தூள் கேட்டுப் போட்டுக்கொள்வதன்றித் தாமே வைத்துப் போட்டுக் கொள்ளும் வழக்கம் இலர். அவ்வாசிரியர் ஐயரவர்களுடைய அருங்கவிகள் கேட்டு இன்புறுவதில் மிகப் பிரியர். ஆகவே, ஒருமுறை பொடி கேட்டபோது, அதனைச் சிறப்பித்துப் பாடினல் தருவதாகக் கூறினர். உடனே, ஐயரவர்கள் வேறு எதுங்கேளாது தமக்கெளியனவாகிய கவிகளைக் கேட்டமைக்காக இன்பெய்தி விளையாட்டாகச் சில குறள்கள் கூறினர்களாம். அதனுள் ஒன்று நினைவிலுளது, அது:—

மூலமாய் மூவடிவாய் முற்றும் புகையிலையின்
ஞாலந் தொழத்தக்க தில். என்பது, இதில்

புகையிலைக்கும் இறைவனுக்கும், உள்ள ஒற்றுமை காண்க. மூலப்-செடி, மூவடிவம், சுருட்டு, இலை, தூள்,- (மூலமொன்றான கடவுள் மூவடிவம் அடைதல்.)

திரிசிரபுரம் எஸ்—பீ-ஜீ கல்லூரியில் தமிழ்ப்பெருங் கணக்காயராகவிருந்த—பிச்சை இபுருஹீம் புலவரவர்கள் நம் பின்னைப் புலவர் பெருமானுக்கு மிக இனிய நண்பர். அப்புலவர் உயிர் நீங்க, அளவிலாத் துயரெய்திக் கூறிய ஐயரவர்கள் கையறு நிலைச் செய்யுட்கள் கல்லையும் கரைக்கும் ஊக்கமுள்ளவை. அவையிற்றில் மாதிரிக்கு ஒன்று தருகிறேன்.

ஐஞ்சீரடி வண்ணக் கலிநிலைத்துறை.

பிழியோ டொக்குஞ் சொல்லினை பிச்சை இபுருகீம்
வழியோ டிச்சென் றன்னை வளர்த்த தமிழ்வாட
மொழியோ டுற்ற வுற்றவ ரேங்க முதுபள்ளிக்
குழியோ நின்னைக் கொண்டு களித்தல் கொடிதந்தோ!

இங்ஙனம் தண்டமிழ் மொழிக்குத் தக்கனவாகிய தொண்டுகள் பல புரிந்திருந்த எந்தையனைய ஐயாவர்கள் தாமும், நீரொழுக்கு நோயாலிறந்த ஞான்று அடியேன்,

தக்கார் புகழ்குடந்தை தன்னிற் றமிழ்ப்பயிரை
மிக்கார்வ நீர்பாய்ச்சி மேன்மா ணவர்புலத்துப்
புக்கார் தரவளர்த்த நாரணனே போயினையே
எக்காலங் காண்பேன் இனியா னினியானே! எனவும்,

பொய்வைத்த பாப்புலவோர் போயொடுங்கப் பின்னைவந்து
மெய்வைத்த சீர்த்திநிறை நாரணப்பேர் வேதியனே!
கைவைத்த நற்றிணையைக் கண்டுமகி ழாமுன்னம்
வைவைத்த கூர்வேன் மறலியுயிர் வவ்வுவதே? எனவும்,

கல்லூரி மாணவர்கட் காமுரைநீ கண்டுடெழுதி
செல்லூர் பொழிற்றஞ்சை சேர்ந்தச் சிடும்போதில்
அல்லூர் மனத்தளியேன் ஆற்றியவோர் சிற்றுதவி
எல்லூரு நின்மனத்தே யெந்நாளும் எற்றனையே! எனவும்,

பிறவுமாகப் பாடி வருந்தினேன். இறவாப்புகழுடைய இவர் பிறவாயாக் கைப்பெரியான் கழலில் இன்புறுகின்றார்.

(தொடரும்.)

புலவர் வரலாறு.

வித்வான்

திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்

போளூர்.

18-ம் பக்கத் தொடர்ச்சி.

ஒருநாள் இவரோடு பேசிக்கொண்டிருக்கையில், இவர் பிறப்புப்பற்றி முன்னே கூறிய வரலாற்றைப்பற்றிப் பேச்சு நடந்தது. அதுபோது அப்பதிகத்தை அவர் பாடிப் பொருள் கூறிவந்தார். வருகையில், "உள்வேர் போல" எனத் தொடங்கும் பாசுரத்தைப் பாடிக்காட்டி ஒரு திருத்தம் கூறினார்கள். 'அச்சுப் பிரதிகள் யாவும் இப்பாசுரத்தை "உள்வேர் போல நோடிமைனார் திறம்கோள்வீரல் குலோர் கோவணம்" என்றே உரைக்கின்றன. என் தந்தையும் பிறரும், அவ்வாறன்றி, "உள்வீர்போல நேர்டிமையினார் திறம் கோள்வீரல் குலோர் கோவணம், ஒள்வாழைக்கனி தேன்சொரி யோத்தூர்க், கள்வீரே யுமகாதலே" என்று தான் பாடுவது வழக்கம். அதுதான் பொருத்தமானது' என்று சொல்லினர். அதனைக்கேட்ட யான், என் மனத்திற்குள், "மேலே 'கொள்வீர்,' 'கள்வீர்' என்று வருதற்கேற்ப, 'உள்வீர்' என்று மாற்றிக்கொண்டனர் போலும்" என நினைத்து வாளாதே குறித்துக்கொண்டேன். இது நிகழ்ந்த பல யாண்டுகட்குப்பின் யான் அத்திருப்பதிகமெழுந்த திருவோத்தூரிலே தங்கி வாழத் திருவருள் கூட்டிவைத்தது. அன்றியும், யான் அங்கேயிருந்து, அத்திருப்பதிகத்துக்கு உரையெழுதும் திருவருணிலையுமுண்டாயிற்று. அவ்வுரையை வெளியிட்ட காலத்துக் கிடைத்த பிரதியனைத்தினும் "உள்வேர்" என்ற பாடமே காணப்பட்டதே யன்றி, "உள்வீர்" என்ற பாடமுண்டென எவரும் கூறவுமில்லை. அதனால், இதனை அந்நூலுட் காட்டாது, அங்கு நடந்த ஔவைத் தமிழகமாணவர் கழக ஆண்டுவிழாவின் அறிக்கையில் மட்டில் குறிப்பாய்க் காட்டியிருந்தேன். சென்ற திங்களில் யான் திருச்சி சில்லாவைச் சேர்ந்த பூவாளூர் சைவசித்தாந்த சபையின் ஆண்டுவிழாவுக்குச் சென்று திருச்சி வழியாகத் தஞ்சாவூர்க்கு வருகையில் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் என்பார் ஒருவரைக்

கண்டேன். இவர் இப்பதிகத்தைப் பாடுகையில், "உள்வீர்" என்ற பாடத்தையே பாடி, "அதுவே பொருத்தமானது" என வற்புறுத்தினர்.

சங்கத் தொகை நூல்களின் சுவை காண்பதில் இவருக்கு மிக்க ஆர்வமுண்டு. ஒருமுறை, யானும் சில நண்பரும் கூடிப் பள்ளியூருக்கருகிலிருக்கும் திருக்கருகா வூருக்குச் சிவபெருமானை வணங்கிப் பரவ விரும்பிச் சென்றோம். அதுசமயம், ஆசிரியர் சேனைநாட்டாரவர்கள் சங்க நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை முதலிய தொகை நூல்களிலிருந்து சிலவற்றைக் காட்டி எங்களை மகிழ்வித்ததோடு ஐங்குறு நூற்றின்மேல் எனக்கு ஆர்வமுண்டாமாறு பல பாட்டுகளைச் சொல்லி இன்புறுத்தினார்கள். நற்றிணைக் குரை யெழுதிய திரு. பின்னத்தூர் நாராயணசாமி அய்யரைத் தமக்கு நன்கு தெரியுமென்றும், அவரது உரைத்திறத்தையும் விரைவிற் கவிபாடும் வல்லமையையும் சொல்லிக் களிப்பூட்டினார்கள்.

நிற்க, நாங்கள் திருக்கருகா வூரிலிருந்து திரும்புங்கால் தாம் திரு. அ. நாராயணசாமி அய்யரோடு பயின்றொழுகிய திறமும் அவரது சங்க நூலாராய்ச்சியின் மாண்பையும் பாராட்டிப் பேசி வந்தார்கள். அக்காலையில், வெளியாகியிருக்கும் சங்க நூல்களில் காணப்படும் பாட வேறுபாடுகளும், கருத்து வேறுபாடுகளும் அய்யர் அவர்கள் சொல்லத் தாம் குறித்துவைத்திருக்கும் குறிப்புக்களும் அவர்கள் எங்கட்குக் கூறி வழிநடை வருத்தத்தை மாற்றிய திறம் இன்றும் என் நெஞ்சில் நிலவுகிறது.

1927-ஆம் ஆண்டில் திருவவளிவணல்லூரில் நடந்த விழாவொன்றிற்கு யான் சென்றிருந்த காலத்து அங்கே வாழ்ந்திருந்த பெருந்தமிழ்ப் புலவர் ஒருவரைக் கண்டு, அவர்பால் உமாபதிசிவனார் பாடியருளிய கோயிற்புராண மூலப் பிரதியிருப்பது அறிந்தேன். அதனைப் படியெடுத்துக்கொள்ள விரும்பி, அவ்வாண்டின் கோடை விடுமுறையிலே பள்ளியூருக்குச் சென்றிருந்தேன். அவ்வூரிலுள்ள திருமடம் இத்தகைய தொண்டிற்கு ஏற்றது; எனக்கு வேண்டிய உண்டி, உறையுள் யாவும் அங்குள்ள நண்பர்கள் இனிது உதவுவர். அவர் தம் நன்றி என் நெஞ்சைவிட்டு என்றும் அகலாது.

இச்சமயத்தில், யான், ஐங்குறு நூற்றினைப் படிக்கத் தொடங்கி யிருக்கும் செய்தியினைத் திரு. ஆசிரியர். சேனைநாட்டாரவர்கட்குத் தெரிவித்தேன். அச்சமயத்தில் அவர்கள் அந்நூல் குறித்துத் தாம் திரு. அயரவர்கள் சொல்லக் கேட்டனவெனக் கூறிய குறிப்புக்கள் பல. அவற்றில் ஒன்று வருமாறு:—

"ஐங்குறு நூற்று முல்லைப் பகுதியில், "அந்தீங்கிளவி தான்றர வேம்வயின்" என்று தொடங்கும் பாட்டு, அச்சுப் பிரதியில் இடையே இடம்விட்டுக் குறையாகவே காணப்படுகிறது. திரு. அ. நாராயணசாமி அய்யரவர்கள் "அப்பாட்டு முழுதுமே யிருக்கிற" தெனச் சொல்லியுள்ளார்கள் என்று, தாம் குறித்துவைத்திருந்த, "அந்தீங்கிளவி தான்றர வேம்வயின், வந்தன்று மாதோ காரேயாவதும் ஆய்தொடி யரும்படர்தீர, வாய்மணி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே" என்பதனைச் சொன்னார்கள். பின்னர் யான், இந்நூலை யாராய்வது குறித்து முயலுங்கால், எனக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர் திரு. சீர்காழி, கோவிந்தசாமி ரெட்டியார் அவர்கள்பால் இருந்த கையெழுத்துப் பிரதியைப் பார்த்து ஒப்பு நோக்கியபோது, இப்பாட்டு "யாவதும்" என்பதற்குப் பதிலாக "யாவயின்" என்ற பாட வேறு பாட்டுடன் நிரம்பியிருப்பக் கண்டு பெரு மகிழ்வுகொண்டேன். இதனைப் பின் அறிஞர் பலர்க்குச் சொன்னபோது அவர்கள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை யென்னலாம்.

திரு. சேனைநாட்டாரவர்கள், தமக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியராகிய களஞ்சேரி அண்ணுசாமி பிள்ளையவர்கள் சென்ற காளயுக்தி யாண்டு சித்திரை பத்தாம் நாள் சிவனடி சேர்ந்த செய்தி கேள்வியுற்ற அந்தக் கணத்திலேயே ஓர் இனிய பாட்டுப் பாடினார். அதன் கண், அன்றைய நாள், காலம் முதலிய வனைத்தும் கூறப்பட்டிருக்கின்றன. அது வருமாறு:—

"சீர்கொண்ட தஞ்சைமா நகர் மன்னர் மன்னரின்
திகழ்வைத்ய சாலைமரபில்
சேர்ந்திடும் பிடகநூல் கலைஞர்களிலே வாசு
தேவன் தவத்துதித்தோன்

ஏர்கொண்ட விசய அண்ணுசாமி நாவலன்
ஈசன் முதலோர்கள் மீதில்
எழிலுறும் பாமாலை சூடிப்பல் கவிகளும்
ஏத்து திருநீலகண்டர்

தார்கொண்ட சரிதை நாடக வுருவமாகவே
தந்து விண்ணதித் தென்கரைத்
தண்களஞ் சேரிசிவ ஞலயத் தருகினில்
தருகருப் பத்தி னீழல்

பார்கொண்ட வைம்பா னிரண்டாண்டு சித்திரைப்
பத்தெனுந் தேதி திங்கள்
பண்புறும் மிதுனலக் கினபூர நாடனில்
பரனடி கலந்தனனரோ.

திருவேரகம் சுப்பிரமணியர் நான்மணிமாலை, திருவேரகயமகக் கட்டளைத் கலித்துறை, திருவேரக நிரோட்டக யமகவந்தாதி முதலியனவும் திரு. அண்ணுசாமி பிள்ளை பாடியனவாகும். இனி, நம் சேனைநாட்டாரவர்கள், பாலபோத விளக்கம் தொகைப் பொருணி கண்டு, மாதர் இலக்கணம், பழஞ் செய்யுட்டிரட்டு என்பனவற்றைச் செய்திருக்கிறார்கள்.

இவ்வண்ணம் தமிழ்ப்பணியால் நலமுற வாழ்ந்த இப்பெரியார் சென்ற சுக்கில ஆண்டு தைத் திங்கள் எட்டாம் நாள் இறைவன் திருவடிப் பேறு பெற்றார். இவர் மகன் திரு. நாராயணசாமி சேனை நாட்டார் தம் தந்தை செய்துபோந்த பணியினையே ஆற்றி வருகின்றார்.

தமிழ்த்தொண்டு புரியும் தக்கோர் வாழ்க.

திரு. இ. வை. அனந்தராமையரவர்கட்குக் கலித்தொகை யாராய்ச்சிக்கு வேண்டிய சில குறிப்புக்களை யுதவிய நண்பர்களுள் இவரும் ஒருவரென்றும் கூறப்பெறுகின்றார்.

படிப் பின்மையைப் பரிகரித்தல்.

திரு. R. லீலாவதி B. A; ஆம்பூர்.

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாங்காணேங் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து. (நாலடியார்)

கல்வியே எந்த நாட்டினரும் முன்னேற்றம் பெறுதற்கு முதற் காரணமாகும். எக்கல்வியிலும் தாய்மொழிக் கல்வியே சிறப்புடையது. அக்கல்விதான் மக்களின் அறிவை வளர்ப்பதற்கு மிக்க உதவி செய்யும்.

ஒரு நாட்டின் வல்லமை ஆங்குள்ள படிப்பாளிகளின் தொகையைப் பொறுத்தது. ஜப்பானில் 1870-ம் ஆண்டு ஓர் இயக்கம் ஆரம்பித்தார்கள். அதன்மூலம் அந்நாட்டில் இப்பொழுது நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப்பேர் எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்கின்றனர். ருஷியாவில் பதினைந்து ஆண்டுகளில் கட்டாயமுறை இன்றியே நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் படித்தவர்களாக இருக்கின்றனர். நம் நாட்டிலோ நூற்றுக்கு எட்டுப்பேர்தான் எழுதவும், படிக்கவும் தெரிந்தவர்கள். நாமும் பிறநாட்டினரைப்போல் முன்னேற்றம் அடையவேண்டின் நம்முள் இளைஞர், முதிர்ந்தவர் என்னும் வேறுபாடின்றி அனைவரும் கல்வி பயிலுதல் வேண்டும். கல்வி பயிலாது முதிர்வயதடைந்தவர்கள் மூன்று வகைப்படுவார்கள்.

அவர்கள்:—

இளமையிலேயே கல்வி கற்க முடியாமல் நின்றவர்கள்.
இளமையில் கற்ற ஆரம்பக் கல்வியையும் பிறகு மறந்தவர்கள்.
இளமையில் கற்றவைகளை வளர்க்கும் விருப்பமுள்ளவர்கள்.
எனப்படுவார்கள்.

தங்கள் குடும்பங்களை நல்லமுறையில் நடத்தவும், நாட்டின் கூட்டுறவு, அரசியல்நிலை முதலியவற்றில் கலந்துகொள்ளவும், கல்வி யாவர்க்கும் இன்றியமையாததாம். தற்காலத்தில் நம் காருண்ய கவர்ன்மெண்டார் நமக்களித்துள்ள ஆதரவின்படி கிராம பஞ்சாயத்து முதலிய பொதுநல ஸ்தாபனங்களிலும், அரசாங்கச் சட்ட

சபைகளிலும் நம்மவர்களே பிரதிநிதிகளாகவும் தலைவர்களாகவும் விளங்குகிறார்கள். அப்பதவிகளை விரும்புகிறவர்களில் தக்கவர்களை நேர்மையான முறையில் தேர்ந்தெடுப்பதில் தமது அரிய வாக்குரிமையை வீணாக்காமல் இருக்கவும் கல்வி அறிவு எல்லோர்க்கும் இன்றியமையாததாம். பெற்றோர்களின் படிப்பின்மை பிள்ளைகளின் கல்விக்கு ஒரு பெரிய முட்டுக்கட்டையாகும். ஆதலால் சிறுவர்கள் பொருட்டாகவேனும் பெரியவர்களும் கல்வி பயிலுதல் வேண்டும். கல்வி கற்றுக்கொள்வதற்கு இளமையே தக்கபருவமாயினும் முதிர்ந்தவர்களும் ஊக்கங்கொண்டால் அக்கல்வி அறிவை எளிதிற் பெறுவர் என்பது திண்ணம். பலவிதத் தொழில்களிலும், தொல்லைகளிலும் ஈடுபட்டுள்ள முதிர்வயதினர் சிறுவர்களைப்போல் பகல் முழுதும் கல்வியிற் காலஞ்செலுத்த முடியாது. அவர்கள் நாள்தோறும் மாலை 7-மணி முதல் 8 அல்லது 8-30-மணி வரை உள்ள காலத்தைக் கல்வி அறிவுபெறும் நேரமாக வைத்துக்கொள்ளலாம்.

கல்வித் துறையிலும், உத்தியோக முறையிலும் பிழைக்கவேண்டிய கட்டாயம் இன்றிப் பூர்வ புண்ணியவசத்தால் பெருஞ் செல்வம் படைத்து நிம்மதியாக வாழும் கனதனவான்கள் நம் நாட்டில் பலர் இருக்கின்றனர். அவர்கள் இனிமேல் கல்வி கற்று நமக்காவது என்ன என்று விட்டுவிடலாகாது. அவர்களும் மாலை வேளைகளில் ஓய்ந்தபோதெல்லாம் படிப்பின்மையைப் பரிகரிக்கும் இம்முறையில் ஒரு விநோதமாகப் பொழுதுபோக்குவார்களானால் அது மற்றவர்களையும் ஊக்கி உற்சாகப்படுத்துவதும் அல்லாமல் நாட்டுக்கும் பெருத்த நன்மை விளைவிக்கும். அதனால் அவர்களும் சிறந்த பேறுபெற்றவர்கள் ஆவார்கள்.

கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் இங்ஙனம் படிக்க விரும்புபவர்களை மாலை வேளைகளில் ஒன்றுகூட்டி உதவுதல் நலம். நம் தாய்மொழியிலுள்ள மேன்மக்களின் வாலாறுகளையும், காவிய விநோதங்களையும் அறியும்படி செய்து அவர்களை மகிழ்விக்கலாம். தாய்மொழிப் பத்திரிகைகள், திரைப்படக் காட்சிகள், ஒலிபெருக்கிகள் முதலியவற்றின் மூலமாகவும் அவர்கள் நல்வாழ்க்கைக்குரிய உலகஞானம் சுகாதார அறிவு முதலியவற்றைப் பெற்று உய்யச் செய்யலாம். இவையன்றியும் இன்னும் ஏற்றமற்ற வகைகளிலும் அவர்களுக்கு நல்லறிவு புகட்டுதல் தகுதியுடையதாம்.

பாடத் திட்டம்.

முதிர் வயதுடையவர்களின் பாடத் திட்டம் அவர்கள் இருக்குங் கிராமங்களின் குறைகளைப் போக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும். சிறுவர்களுக்குரிய பாடத் திட்டங்கள் பெரியவர்களுக்கேற்றவை யல்ல. ஏனெனில் தக்க வயதுடையவர்கள் எழுதவும் படிக்கவும் அறியாதவர்களாக இருப்பினும் உலக வாழ்க்கையில் போதிய அறிவுடையவர்களாவார்கள். அவர்களுக்கேற்றவைகளைக் கொண்டே அவர்களைக் கல்வியில் பயிற்றுதல் வேண்டும். துண்டு விளம்பரங்களும், நாடக அறிக்கைகளும் பிறவும் அவர்களுக்கு எழுத்துகளைக் கற்பிக்க உதவும். நாடகங்கள், இசைப் பாடல்கள், பஜனைகள் முதலியவற்றின் மூலம் அவர்களுக்குச் சிறந்த நீதியையும் பக்தியையும் புகட்டலாம். முதிர்ந்தவர்களுக்குக் கற்பிக்கவேண்டியவற்றை வரையறுப்பதற்குமுன், நாம், அவர்கள் எவ்வகைப் பயனைப் பெறக்கூடிய அறிவைத் தரப்போகின்றோம் என்பதை மறக்கலாகாது. சிறு கிராமங்களில் முதிர் வயதுடையவர்கள் வேலை இல்லாத வேளைகளில், பொழுதுபோக்க வழியறியாது நாட்டுக்கே கேட்டை விளைவிக்கக் கூடிய தீமைகளில் தம்மை அறியாமலே பழகிவிடுகிறார்கள். இவ்வித இடையூறுகளைத் தடுப்பதற்கு அவர்களைக் கல்வியில் பயிற்றுதல் கற்றவர்களது கடமையாம். அவரவர்கள் தத்தம் சமயங்களைப்பற்றிச் சிறிதாகிலும் அறிந்துகொள்ளும்படி செய்வது நலம். தாய்மொழியிலுள்ள வெளியீடுகளைப் பொழுதுபோக்காகப் படிக்கும் ஆர்வம் அவர்களுளத்தில் வளருமாறு செய்வோமாகில் அதன் மூலம் அவர்கள் பற்பல அரிய நூல்களையும் நன்கறிந்து பயன்பெறுவார்கள். தம் உறவினர்களுக்குக் கடிதங்கள் எழுதிக்கொள்ளவும், குடும்பத்தின் வரவு செலவு கணக்குகளை வைத்துக்கொள்ளவும் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து வாழவும், யாத்திரைக்குரிய பற்பல வெளியூர்களைப்பற்றி அறிந்துகொள்ளவும், அரசாங்கத்திட்டங்களை உணரவும், உழவு, உடல்நலம், வாணிபம் முதலியவற்றைப்பற்றித் தெளிவாக அறிந்துகொள்ளவும் ஏற்ற வகையில் முதிர்ந்தோர் கல்வியின் பாடத் திட்டம் இருத்தல் வேண்டும்.

படிப்பின்மையைப் பரிகரிக்க விரும்பும் ஆசிரியர்கள் பரந்த நோக்கமும் சிறந்த திறமையும் உடையர்களாக இருத்தல் வேண்டும். அவர்களிடம் தன்னலம், பேராசை, பொறாமை முதலிய தீக்குணங்கள் சிறிதும் காணப்பெறுவது அரிதாம். அவர்கள் பிறர்க்குதவும் பெருந்தகையாளர்களாக இருப்பர். ஊக்கம், உற்சாகம், பொதுநலப்பற்று முதலியவை எப்பொழுதும் அவர்களிடம் குடிகொண்டிருக்கும்.

அவர்கள் தம்மை எல்லோரும் நன்குமதித்துத் தாங்கள் செய்யும் ஊழியத்தை என்றும் ஆதரிக்கும்படியான வகையில் தங்கள் தகுதியை வளர்த்துக்கொள்வார்கள். இத்தகைய உத்தமர்கள் எவ்வகையான அரிய செயல்களைச் செய்யப் புகினும் அவற்றில் வெற்றியே பெற்று விளங்குவர். படிப்பின்மையைப் பரிகரிப்பவர்கள் பாதிரிமார்களும், சந்நியாசிகளும் தங்கள் மதங்களைப் பரவச்செய்வதற்காக எவ்வாறு பற்றோடு முயன்று உழைக்கின்றார்களோ அவ்வாறே பாடுபடுதல் வேண்டும். இவர்கள் சங்கீத ஞானமும் உடையவர்களாக இருப்பின் மிகவும் நலம். உயர்தரப் பட்டம்பெற்றும் வேலை இல்லாதவர்கள் இத்துறையிற் புகுந்து தங்கள் கிராமப் பொதுமக்களின் அறியாமையைப் போக்க முயன்றால் நலம் விளையும். கோடை விடுமுறை பெற்றுள்ள கல்லூரி மாணவர் சிலர், இம்முறையைத் துவக்கி ஒவ்வொருவரும் இரண்டுபேர்களையாவது நன்கு சீர்திருத்த வேண்டுமென்று உறுதிகொண்டுள்ளார்கள். தற்காலம் நமது நாட்டின் சில பாகங்களில் பொது மக்களின் அறியாமை இவ்வாறுதான் நீக்கப்பெற்று வருகின்றது.

பொருளாதாரம்.

படிப்பின்மையைப் பரிகரித்தல் அரசாங்கத்தாரின் முதற் கடமையாம். இதுபற்றியே மத்திய அரசாங்கத்தார் முதிர்வயதினர் கல்விக்காக வருஷவாரியில் ஒரு கோடி ரூபாய் வழங்கி வருகிறார்கள். அவ்வுதவியைக் கொண்டும், பிறர் நன்கொடைகளைப் பெற்றும் இப்பொது நல ஊழியத்தை நடத்தலாம். ஆசிரியர்கள் யாதொரு ஊதியமும் கருதாமல் பாமர மக்களின் அறிவின்மையைப் போக்க முன்வந்து, அறிவாளிகள் தங்கள் ஊர்களுக்கு வரும்போதெல்லாம் முதிர்ந்தோர் கல்வியைப் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தும்படியான ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். இதுபற்றிக் கட்டுரைகளும் விளம்பரங்களும் அடிக்கடி வெளியிடுதல் நலம்.

உலகம் தற்போது பல மாறுதல்களை அடைந்து வருகின்றது. நமது நாடும் வெகு விரைவில் அடிமை வாழ்க்கைநீங்கி முழு உரிமையைப் பெறப் போகின்றது. அப்பொழுது கிராம வாசிகளே பொதுநல ஸ்தாபனங்கள் எல்லாவற்றிலும் தலைமைவகித்து நாட்டின் ஆட்சியை நடத்தவேண்டிய பொறுப்பு ஏற்படும். ஆதலால் இதுகாறும் கல்வி பயிலாத பெரியோர்கள் இனியேனும் தங்கள் ஓய்வு நேரத்தை இந்நல்வழியில் செலுத்தி நம் நாட்டை நலம் பெறச் செய்வார்களாக.

மின்சார வேளாண்மை.

ஓர் ஆங்கிலக் கட்டுரையைத் தழுவிய மொழிபெயர்ப்பு.

திரு. N. B. இராமலிங்கம் B. A;
அழிஞ்சிக்குப்பம், மேல்பட்டி வ. ஆ.

மின்சார வேளாண்மை எனின் மின்சார சக்தியைச் செடிகளுக்குச் செலுத்தி, அவைகளை நன்றாக வளரச்செய்துபயன்பெறுதல் என்பதாம். மின்சார ஓட்டம் மண், விதை, செடி ஆகிய இவற்றிற்கு ஊக்கத்தையும், பலத்தையும் ஊட்டுகின்றது. "அல்ட்ரா வொயலட்" என்னும் ஒருவிதச் சுடர் மின்சார சக்தியிலிருந்து உண்டாகின்றது. இந்தச் சுடரே செடிகளுக்கு உற்சாகத்தை அளிப்பதாகும். மண், விதை, செடி ஆகிய இவற்றைப் பலப்படுத்துவதற்குத் தனிப்பட்ட கருவிகள் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்துவதற்குச் சாதாரணமான வேளாண் மக்களால் முடியாது. அக்கருவிகளைவிடச் சிறந்ததும், இலேசானதுமான வேறு வழியுண்டு. மெயின்புரியில் செய்த ஆராய்ச்சியில் இரண்டு வகையான தண்ணீர்களைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

அவை:—

1. மின்சார நீர். **(Agaskarised Water)** 'அகஸ் கரைஸ்ட் உவாட்டர்'

2. வெங்காயச்சத்துள்ளநீர். **(Onionised Water)** "ஆனியனைஸ்ட் உவாட்டர்" என்பனவாம்.

இவ்விருவகை நீராலும் முற்கூறிய நன்மைகளைப் பெறலாம்.

1. மின்சார நீர்:—

நிலத்தில் தொடர்பில்லாத வகையில் ஒரு பாண்டம் நிறையத் தண்ணீரை எடுத்துக்கொண்டு அதிக சக்திவாய்ந்த மின்சாரத் தீப்பொறியை அதில் செலுத்தினால் அத்தண்ணீர் மின்சார நீர் என்று பெயர்பெறும். அந்நீரைச் செடிகளின்மேல் கொட்டினால் அவைகள் வலிவடைந்து நன்றாக வளரும். மின்சார மேற்றப்பெற்ற அத்தண்ணீரை மரத்தால் ஆகிய அகப்பையில் எடுத்துச் செடிகளின் பெரும்பான்மையான பாகங்களில் படும்படி கொட்டுதல் வேண்டும். ஒவ்வொரு செடிக்கும் இரண்டு அல்லது மூன்று கோப்பை அளவுள்ள நீர் முகந்து கொட்டுதல் போதும். அத்தண்ணீர் அளவுக்கு மிஞ்சினால் செடிகள் எரிந்துவிடும். மின்சார நீரின்

MAHAMAHOPADHYAYA ... SWAMINATHAIYAR LIBRARY

அளவு செடிகளின் பருமனுக்குத் தக்கவாறு இருத்தல் வேண்டும். நோய்கண்ட ஆரஞ்சு மரங்களும், மின்சார நீரால் உயிர்ப்பிக்கப் பெற்றன. சித்தூருக் கடுத்த ஒரு சிற்றூரில் கருப்புத் துண்டுகளை மின்சார நீரில் தோய்த்து நட்டார்கள். அவை விரைவில் முளைத்துக் கனமான கரும்புகளை விளைவித்தன. கருப்பஞ்சாறு கொப்பரையில் இருக்கும்போதே அதில் மின்சாரத் தீப்பொறியைச் செலுத்தினால் சாறு நன்றாகத் தெளிந்து விடுகிறது. இதனால் மரக்கரி முதலியவைகளைக்கொண்டு கருப்பஞ்சாற்றைச் சுத்தஞ் செய்விக்கவேண்டிய முக்கியம் ஏற்படுவதில்லை. எந்தவிதமான பயிரும் பண்ணக்கூடாத சுண்ணாம்பு நிலத்திலுங்கூட, மின்சார நீரைப் பாய்ச்சியதால் அருமையான கரும்பு பயிரானதாகச் சொல்லப்படுகிறது.

2. வெங்காயச் சத்துள்ள நீர்:—

கிழங்குப் பயிர்களில் முக்கியமாக வெங்காயம் "அல்ட்ரா வொயலட்" என்னுஞ் சுடரை விடுகிறது. செடிகளை வளர்படுத்தவும், அவற்றின் நோயைப் போக்கவும் அச்சுடர் பயன்படுகிறது. சிறிய பருமனுள்ள வெங்காயங்கள் இச்சுடரை அதிகமாக வெளிவிடுகின்றன. வெங்காயம் நிலத்திலிருந்து வெட்டி எடுக்கப்பெற்ற பிறகு 24 மணி நேரம் வரைதான் இச்சுடர்கள் வெளிபாகின்றன. வெங்காயங்களை வேர் அறுமல் எச்சரிக்கையாகப் பிடுங்குதல்வேண்டும். வேரில் பிடித்துள்ள மண்ணை அலம்பி அவற்றை ஒரு மண் பாண்டத்திலோ அல்லது மரத் தொட்டியிலோ வைத்து அதில் 200 மடங்கு நீரை ஊற்றிவைத்தால் "அல்ட்ரா வொயலட்" என்னும் வெங்காயச் சுடர்கள் கொஞ்சங் கொஞ்சமாக அந்நீர்க்குள் செல்லுகின்றன. இத்தண்ணீரே வெங்காயச் சத்துள்ள நீர் எனப்படும். வெங்காயப் பயிர் வளர்ந்துகொண்டிருக்கும்போதும், அதன் அருகே தண்ணீர் ஓடும்போதும் இந்தச் சக்தி பாய்கிறது. ஆதலால் வெங்காயத்தை ஒரு பொதுக் கால்வாய் வழியாக நட்டுவைத்தால் பக்கத்திலுள்ள பயிர்களும் பலம் பெறும். மேயின்புரி ஆராய்ச்சியின்படி மின்சார நீர்க்குப் பதிலாக வெங்காயச் சத்துள்ள நீரைப் பயன்படுத்தலாம். கோதுமை முளை கிளம்புவதற்கு மின்சார நீரைவிட வெங்காயச் சத்துள்ள நீரே மேலானதென ஒரு சோதனையில் முடிவடைந்திருக்கிறார்கள். கோஸ்கீரை போன்ற தோட்டக்கால் பயிர்களில் வெங்காயச் சத்துள்ள நீர் வியப்பை விளைவித்துள்ளது. ஒரு ஏகரா நிலத்திற்கு வெங்காயச் சத்துள்ள நீர் வேண்டுமானால் 10 × 10 அடி பரப்புள்ள இரண்டு பாத்தி வெங்காயத்தை நட்டு இரண்டு நாட்களுக்கொருமுறை தண்ணீர் பாய்ச்சல்வேண்டும்.

வெங்காயச் சத்துள்ள நீர் மக்களுக்கும் மிக்க பயன் தரக்கூடியது. அந்நீரால் குடல் நோய் ஒழியும். மலச்சிக்கல் கழியும். புண், தொண்டைப்புண் முதலியவை ஆறும். தயிராயிட் என்ற உறுப்பின் வீக்கமும் நீக்கமுறும்.

பழச் செடிகளுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தும் விதம்:—

பழங்களை விளைவித்து நல்ல பயன் பெறவேண்டுமானால், முதலில் விதை போடுவதிலும், பின்பு அதைக் காப்பாற்றுவதிலும் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். காலிபோர்னியா தேசத்தில் தானியங்கள் பயிரிடப்பெறும் பரப்பைவிடப் பழங்கள் விளைவிக்கப் பெறும் பரப்பே மூன்று மடங்கு அதிகம். சாதாரணமான தோட்டங்களில் விளைவிக்கப்பெற்ற பழங்களைவிட மின்சாரத்தைக்கொண்டு விளைவிக்கப்பெற்ற பழங்கள் அதி இனிப்பும், நல்ல பார்வையும் உடையவைகளாக விளங்குகின்றன.

புது முறை ஆராய்ச்சியில் சிலவற்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். காற்றிலும், நிலத்திலும் கலந்திருக்கும் மின்சார காந்த சக்தியை எல்லாத் தாவரங்கட்கும், முக்கியமாகப் பழச் செடிகட்கும் செலுத்துவதனால் அவற்றின் வளர்ச்சி அதிகப்படுகிறது. இதனால் அத்தாவரங்களுக்கு வரும் நோயையும் தடுக்கலாம். இந்நேர்மையான சக்தியை வெற்றிகரமாகக் கைப்பற்றி ஒரு செடிக்கோ அல்லது அதன் ஒரு பாகத்திற்கோ செலுத்தவேண்டும். இயற்கை மின்சாரம் இல்லையேல் செயற்கை மின்சாரத்தைச் செலுத்தி அதே பயனை அடையலாம். இச்சக்தியே ஒரு செடியின் முழுவளர்ச்சிக்கும் போதுமானதென்று நினைத்தல் கூடாது. நிலத்தைப் பண்படுத்துதல், எருவிடுதல், முதலியவைகளும் முக்கியமானவைகளே. மின்சாரம், செடிகளின் நோயைத் தீவரமாகத் தீர்க்கின்றது. கீழ்க்கண்ட எளியமுறைகள் பழங்கள் விளைவிக்குந் தோட்டக்காரனுக்கு மிகவும் பயன்படும். பழந்தருந் தாவரங்கள் பழச் செடிகள் எனவும், பழமரங்கள் எனவும் இருவகைப்படும். பழச் செடிகளுள் சில குட்டையாக வளரும் நாற்றங்கால் சிறு செடிகளாகவும் உள. கீழ்க் கூறியுள்ள எம்முறையைக் கொண்டேனும் வேண்டிய பயனை அடையலாம். செயற்கை மின்சாரத்தைச் செலுத்துவதால் பயன் விரைவிற் கிடைக்கும். அப்படிச் செய்வதில் சக்தியை அதிகமாகச் செலுத்தாமல் பாதுகாத்தல் வேண்டும்.

(தொடரும்.)

படிக்கும் பழக்கம்.

திரு. B. சாவளப்பா B. A;

ஈண்டுப் படிப்பு என்னுஞ் சொல் கல்வி என்ற பொதுப் பொருள் பெறாது வாசித்தல் என்பதைக் குறிக்கும். எனவே இத் தலையங்கம் ஒன்றைப் படிப்பதெவ்வாறு என்பது பற்றியதாம். பிறர் செவிப் படும்படி படித்தல், மனத்திற்குள் படித்தல் எனப் படித்தல் இருவகைப்படும். இவற்றை உரத்தப் படிப்பு என்றும், மௌனப் படிப்பு என்றும் கூறுவர். எவ்வாறு படிப்பினும் பொருள்படப் படித்தல் இன்றியமையாததாம். அஃதின்றேல் அப்படிப்புப் பயனற்றுவிடும். ஆதலால் யாரும் பொருள் விளங்கும்படி படிக்கும் பழக்கம் பெறுவது நலம்.

படிப்பதில் உள்ள இவ்விருவகை முறைகளையும் பயன்படுத்துவது எவ்வாறு என்பதைப் பார்ப்போம். படிப்பதற்குரியவைகள் செய்யுள் எனவும் உரை அல்லது வசனம் எனவும் இரு கூறும். "செய்யுள் ஒரு ஒலிப்படம் அது செவியின் கலையாம். நாம் அதன் பொருள் உணர்ந்து உள்ளுவகை கொள்ள விரும்பின் அதனைப் பன்முறையும் உரக்கப் படித்தல் வேண்டும்" என்று அங்கிலரில் ஓரறிஞர் கூறுகின்றார். ஆதலால் செய்யுள் உரத்தப் படிப்பினதன்றி மௌனப் படிப்பினதன்று. உரக்கப் படித்தல் பிறர் உள்ளத்திலுள்ள உணர்ச்சிகளை எழுப்பப் பயன்படும். மௌனப் படிப்பு ஒன்றன் கருத்தைத் தமக்குள் தாமே தெரிந்துகொள்ள விரும்புவோர்க்குப் பயன்படும். உரைநடையை இவ்விரு வகையாகவும் படித்துணரலாம். செய்யுள் பெரும்பான்மையோர்க்கு மௌனமாகப் படித்தறிதற்கரியதாம். அன்றியும் அது உரக்கப் படிப்பதற்கே உரியது.

இனி, பொருள்படப் படித்தல் எனின் என்ன? அங்ஙனம் படித்தற்குரிய வழிகள் யாவை? என ஆராய்வம். படிக்குங்கால் படிப்போராகிய தமக்கும், கேட்போராகிய அவையோர்க்கும், நூலின் கருத்து விளங்கவும், உவகை, அவலம், நகை, வீரம் முதலிய சுவைகள் வெளிப்படவும், தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடங்கள் தோன்றவும், அமயம் ஒப்ப எடுத்தும் படுத்தும் படித்தலே பொருள் விளங்கப் படித்தல் எனப்படும். இவ்வாறு படித்தற்குரிய

வழிகளில் நிறுத்துக்குறிகளின் உதவி முதன்மையானதாம். முற்றுப் புள்ளிக்கு ஒரு மாத்திரையும், முக்காற்புள்ளிக்குமுக்கால்மாத்திரையும், காற்புள்ளிக்குக் கால் மாத்திரையும் என்ற கணக்கோடு நிறுத்திப் படித்தால் பொருள் தெள்ளிதிற் புலனாம். மேலும் முற்றுக்கள் எச்சங்கள் வந்துழி அவைகளுக்கேற்ற காலம் தாழ்த்திப் படிப்பினும் பொருள் இனிது காணும். இன்னும் மூவிடங்கள் தோன்றுந் தோறும் அவைகட்கிணங்கத் தன்னை இடமாக்கி உரையாடல் வடிவமாகப் படிப்பின் கேட்போர் செவிக்கமுதென இனிக்கும். தனக்கும் ஊக்கமும், உற்சாகமும் விளையும். மற்றும் புணர்ச்சி விகாரங்கள் அடைமொழிகள் முதலியவற்றின் பொருள் வேறுபாடுகளும் புலனாகப் பெருந்துணையாம்.

பொருள்படப் படித்தற்குப் புள்ளிகள் ஏதுவாகும் எனக் கூறின் அத்தகைய புள்ளிகள் முற்காலத்துத் தமிழில் உண்டோ? இல்லையாதலால் நம்முன்னோர் பொருளாகாதபடி படித்தனரா? என வினாக்கள் எழுவது இயற்கை. இக்காலத்தில் அங்கிலத்தில் வழங்கும் புள்ளிகளும், பிறகுறிகளும் தமிழில் வழங்கவில்லை. வழங்காதபோதும் நம்முன்னோர்கள் பொருள்படத்தான் படித்துவந்தார்கள். இதற்குச் சான்றாக இன்றும் இருந்துவரும் ஏட்டுத் தம்பிரான்கள் புராணங்களையும், இதிகாசங்களையும் பொருள்படப் படிக்கும்போது நம்முன்னோர்கள் இக்காலத்தவரினும் நன்கு வாசித்துவந்தனர் என்பது சொல்லாமலே போதரும். ஆனால் இத்தகைய உதவிகள் அங்கிலத்தில் உபயோகிக்காது விடின் வாசிப்புப் பொருள்படாது குற்றங் குறையாக முடியும். காரணம் யாதெனத் துருவிப் பார்க்குங்கால் எம்மொழிக்கும் இல்லாத இயற்கைநடை தமிழுக்கு உண்டெனத் தெரியவரும். இத்தகைய இயற்கைநடைநலம் வாய்ந்த தமிழ்ச் செய்யுளினும், உரையினும் தற்காலம் புள்ளிகளும் குறிகளும், இட்டு எழுதுதல் என்னோ? என இன்னுமொரு கேள்வி பிறக்கலாம். தமிழ் நாட்டில் பிறமொழிகள் புகவும், நம்நாடு பிறநாட்டார் வசமாகவும், அந்நாட்டார் மொழிகள் இங்குத் தலைமைபெற்று வழங்கவும் நம் தமிழர் தம் தாய்மொழியை மறந்து அம்மொழிகளைக் கற்கக் காமுற்றதால் நம்மவர்க்கும் தமிழில் பயிற்சி குன்றக் குன்றத் தம் தமிழ் அன்னையை மறந்தனர். வெளிநாட்டார் புள்ளிகளும் குறிகளும் நம்மில் நுழைந்தன. ஆகவே தமிழை நன்கு கற்ற ஒரு சிலர், நம்மவர் அங்கிலத்தில் மூழ்கிக் கிடத்தல்கண்டு அன்னாரைத் தமிழை எளிதில் கற்க ஊக்குவான் வேண்டிப் புள்ளிகளையும்

குறிகளையும் கையாளலாயினர். இவ்வடையாளங்கள் நம் தமிழர்க்குத் தெரியாதனவும், வேண்டாதனவுமான செயற்கைச் செருகல்கள். நம் பழந்தமிழ் மக்கள், கற்றோரும் மற்றோரும் உள்படச் செய்யுட்களைத் தான் எழுதியும், பேசியும் வந்தார்கள். அவர்கட்கு உரை நடை என்பது தெரியவே தெரியாது. இதனால் நம் முன்னோர் எத்தகைய சீரிய மொழிவளம் பெற்றிருந்தனர் என்பது வெள்ளிடைமலை. செய்யுள் என்பது இயற்கையாக ஒருவர் உள்ளத்தில் உதிக்கும் உணர்ச்சியின் வெளித் தோற்றமாகும். அது ஒரு ஒலிப்படமாக எழுத்துக்களில் அமைகிறது. செய்யுளை வாசிக்கவும் அதன் கருத்தையுணரவும் படிப்போர் உள்ள உணர்ச்சி உதவுமேயன்றிப் புறக் கருவிகளாகும் புள்ளிகளும் குறிகளும் பயன்படா. அத்தகைய செய்யுளை இவ்வடையாளங்கள் கொண்டு பிரித்துவைத்தல் ஒரு பெண்பாவையின் அங்கங்களைச் சிதைத்தலுக் கொக்கும். இக்கொடுமையை உணர்ந்தே நம்மவர் இவ்வடையாளங்களைக் கையாண்டிலர் போலும். உரைநடை, செய்யுளைப்போல் இயற்கையதன்று. இந்நடை நம் நாட்டினுள் நுழைந்த ஒரு செயற்கை. ஆகவே இவ்வுரைநடை பிறமொழி உரைநடையிலுள்ள குறிகளையும் புள்ளிகளையும் இன்னும் வேறுபல அடையாளங்களையும் கொண்டு நடக்கிறது.

ஒரு மொழியின் எழுத்துக்கள் அனைத்தும் கற்ற யாவரும் வாசிக்கத் தெரிந்தவர்கள் என நாம் நினைக்கின்றோம். இது தவறான கருத்தாகும். மொழிவளம் நிரம்பப்பெற்ற கணக்காயர்களுள், சிலர் பொருள்படப் படிக்கத் தெரியாது நிறுத்தவேண்டிய இடங்களில் நிறுத்தாதும், நிறுத்தக்கூடாத இடங்களில் நிறுத்தியும் பொருள் சின்னபின்னமாகப் படித்துத் திண்டாடுவதைக் கண்கூடாகக் காணலாம். ஆனால் மொழிப்பயிற்சி ஒரு சிறிதும் பெறாதவர் தெளிவாக வாசித்தலை நோக்க வியப்புத் தருகிறது. இதன் காரணம் யாதெனக் கூறுதும். எத்தகைய கலைஞராகினும் ஆற்றொழுக்காகப் பேசுந் திறமையும் பிறரிடம் இயல்பாக எளிதில் உரையாடும் சிறப்பும் பெறாதவர்கள், கருத்துத் தோன்றவும், செவிமடுப்போர் உள்ளத்தில் உணர்ச்சி உதிக்கவும் படிக்கத் தெரியாதவர்கள் என்பது அனுபவ பூர்வமாகும். மிகச் சிறிய படிப்பினர், யாவரும் அறியுமாறு படித்தல் அவர்கள் தம் சிறு வயது முதற்கொண்டே பேசும் வன்மையையும் அளவளாவும் தன்மையையும் பழகி வருபவர்கள் என்பதை உணர்த்தும். ஆகவே மொழிகளின் கருத்து வெளிப்படக் கேட்போர்

உளத்தில் உணர்வு கிளக்கப் படிக்கக் கற்பதற்குத் தட்டுத் தடுமாற்ற மின்றிப் பேசவும், அளவளாவவும் பழக்கம்பண்ணி வரல்வேண்டும்.

சரிவரப் படிக்கத் தெரிந்தவர்கள் பேசுந் திறமையும், பிறரிடம் உரையாடுந் திடமும் பெற்றவர்களாவார்கள். இத்திறமைகள் நம் சிறுவயது முதற்கொண்டே பயின்றாலன்றிக் கைகூடா. குழந்தைப் பருவத்தில் நம் பெற்றோரும், உற்றோரும் பேசுவதைக் கேட்டு அவ்வாறே நாமும் பேச ஆரம்பிக்கின்றோம். அவர்கள் சரிவரப் பேசும் வன்மை பெற்றிலாராயின் நமக்கு அப்பருவத்து எது சரி எது பிழை எனத் தெரியாததால் யாதும் சரியே என்று குற்றமான சொற்றொடர்களைக் கற்றுவிடுகின்றோம். இளம் பருவத்தில் அக்குற்றங் குறைகள் பசுமரத் தாணிபோல் பதிவதால் அவை நம்மை விட்டு என்றும் நீங்குவதில்லை. மேலும் நம்மோடு பழகும் நண்பர்கள் பிழையின்றியும், பயமின்றியும் ஒழுங்குபடப் பேசுவோராதல் வேண்டும். அவர்கள் பேசும்போது நாம் விழித்துப் பார்த்திராது சம்பாஷணையில் கலந்துகொண்டாலன்றி மொழி திரும்பாது, கருத்துக்கள் கோர்வைபடா. அதற்கேற்பச்சொற்கள் ஒழுங்காக அமையா. நாம் பேசுவது கொச்சைப் பேச்சாக முடியும். குற்றங்கள் நேர்ந்திடினும் குறையில்லை என்று பேசத் துணியவேண்டும். பேசப் பழகப் பழகக் குறைகள் நீங்கிக் குணமே மிகுந்து சிறந்த படிக்குந் திறமை நிறையும்.

நாம் பேசும் சொற்களே எழுத்துக்கள் உருவமாக ஏட்டில் அமைந்துள்ளன. எனவே வாசிக்கும்போது பேசுவதுபோல் இருக்க வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். மேலும் எழுதுவது பேசும் இயல்பினதாக இருத்தல் வேண்டுமென்பதும் போதரும். ஆகவே வாசித்தலும் பேசும் இயல்பிற்றன்றோ? ஆதலால் பொருள் படப் படித்தல் என்பது, நாம் பேசுவதுபோல் இயற்கைத் தன்மை வாய்ந்ததாதல் வேண்டும். இத்தகைய இயற்கைநடை எழுத நம் தமிழ்மக்கள் கற்றிருந்ததால் பொருள்படப் படிக்க உதவும் குறிகளைப் பயன்படுத்தவில்லை ஆகவே கருத்துத்தோன்றப் படித்தல் என்பது ஒரு எளிய செயல் அன்று. இது ஒரு தனிக்கலை; பேசுந் திறமை பெறுவது ஒரு பெரும் பேறு. அதனினும் சிறந்த பேறு கருத்து விளங்கப் படித்தலாம்.

(தொடரும்.)

வெளியீடுகளின் வரவு.

1. ஸ்ரீ மங்களாம்பிகை மாலை.

கருந்திட்டைக்குடி திரு. பண்டித வி. சாமிநாத பிள்ளையவர்களால் கும்பகோணம் ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர் இடப்பால் அமர்ந்தருளும் ஸ்ரீ மங்களாம்பிகையின் திடிவடித் துணைகட்குப் புனைந்தணி விக்கப்பெற்றது. இதனைக் குடந்தை யதார்த்தவசனி பத்திராதிபர் T. V. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் யாவர்க்கும் நன்கொடையாகக் கிடைக்குமாறு வெளியிட்டார்கள்.

பத்தித் தேன் ததும்பும் இப்பாமாலையைத் தமிழணங்கு வணக்கத்துடன் வரவேற்றுப் போற்றுகின்றாள்.

2. ஐங்குறு நூறு மூலமும் விளக்க வுரையும். முதற்பகுதி. ரூ. 1-4-0.

இவ்வுரையாசிரியர் திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்களாவார்கள். மிக அழகாக உயர்ந்த கடிதத்தில் 280 பக்கங்களில் அச்சிடப்பெற்றது. பண்டைத் தமிழ் மக்களின் கலை, நாகரீகம், மனப்பான்மை முதலியவற்றை அறிய வேண்டுவோர்க்குதவும் இதனையும் தமிழணங்கு ஆர்வத்துடன் வரவேற்கின்றாள்.

3. கிராம தூதன். மாதாந்தரப் பத்திரிகை மலர் 2 இதழ் 5.

மிகவும் உயர்ந்த கடிதத்தில் (Double crown 1/8 Art paper) மேல்நாட்டுப் பத்திரிகைகள் போலத் திகழுந் தமிழ் வெளியீடு இஃதொன்றே. கிராம முன்னேற்றங் கருதிய பல அரிய கட்டுரைகள் வாய்க்கப்பெற்றது. அனைவரும் படித்துணரவேண்டும் என்னும் நோக்கத்துடன் மிகவும் குறைந்த தொகை ரூ. 1—0—0 சந்தா உடையது. வெளியிடுவோர் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன். வட சித்திரை வீதி, மதுரை. தமிழணங்கு இதனையும் நன்றியறிதலுடன் வரவேற்கின்றாள்.

4. Polur Board High School Magazine.

போளூர் உயர் கலைக்கழக ஆண்டிதழ் முதற்றொகுதியின் முதல் எண். அக்கலைக் கழகத்தலைவர் திரு. M. N. வடிவேல் முதலியார் B. A; L. T; அவர்களின் தலைமையில், ஆற்றல் சான்ற துணையாசிரியர்கள் மற்றும் அறுவரை ஆசிரியக் குழுவாகக்கொண்டு திறம்பெற நடத்தப்பெறுவது. மாணவர்க்கும் மற்றெவர்க்கும் பயன்படக்கூடிய சிறந்த கட்டுரைகள் அங்கிலத்திலும் அருந்தமிழிலும் நிறைந்து விளங்கப்பெருகின்ற இதனையும் நம் தமிழணங்கு மகிழ்வுடன் வரவேற்கின்றாள்.

ஆசிரியன்.